# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 8 JUNE இதழ் 6




வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

# ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. "பவுலின் மார்ஸ் மேடைப் பிரசங்கம்" 1
2. கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை 8
3. (பெண்கள் பகுதி) பெண்ணுரிமை 13
4. நற்செய்தியின் வல்லமை 18
5. இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நான் ஏன் விசுவாசிக்கிறேன்? 21
6. யெகோவா சாட்சிகள் 5 கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்! 26
7. இயேசுக்கிறிஸ்து தேவனின் குமாரன் 31

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 JUNE Issue-6


## ஆசிரியவுரை

## "பவுலின் மார்ஸ் மேடைப் பிரசங்கம்"

பரிசுத்த வேதாகமத்தில் புகழ்பெற்ற பிரசங்கங்கள் பல உண்டு. நன்மை செய்கிறவராய் இப்பூபாகத்தில் சுற்றித்திரிந்த, நம் கிறிஸ்து ராஜாவை திரளான ஜனங்கள் பின்பற்றி வந்த பொழுது, அவர் மலையின் மீது ஏறிச் செய்த "மலைப்பிரசங்கம்" (மத் : 5-7) பாவம் அறியாத தேவ ஆட்டுக் குட்டியான இயேசுக் கிறிஸ்துவைக் கொஞ்சமும் தயங்காமல் கொடூரமான சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்த எருசலேம் பட்டணத்துவாசிகளுக்கு முன்பாக, பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு செய்த "3,000 பேரை இரட்சித்த பிரசங்கம்" (அப். 2-ம் அதிகாரம்) முதலாவது கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் செய்த அற்புதங்களைக் கண்டு, பொறாமையினால் வெகுண்டெழுந்து, அவன் வாயை அடைக்க அவனோடு தர்க்கம் பண்ணி, அதிலும் தோற்றுப்போன ஒரு கிறிஸ்து விரோதக் கும்பல், அவனை ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாகக் கொண்டு சென்ற பொழுது, ஸ்தேவான் செய்த "மகா பிரசங்கம்" (அப். 7) என்று இப்படி பல பிரசங்களைச் சொல்ல முடியும். புகழ்மிக்க இந்த வரிசையிலே, அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்து மார்ஸ் மேடையில் செய்த பிரசங்கத்தையும் நாம் பெருமையோடு சேர்க்க முடியும். அப்போஸ்தலர் 17-ம் அதிகாரம், 16-34 வசனங்களில் இதை நாம் காணலாம்.

பண்டைய கிரேக்கத்தில் மிக முக்கிய பட்டணமாக இருந்தது தான் அத்தேனே பட்டணம். பாரம்பரியமிக்க பின்னணி இப்பட்டணத்திற்குச் சொந்தம். உலகில் உள்ள மிக அழகிய பட்டணங்களில் ஒன்றாக அந்நாட்களில் இப்பட்டணம் கருதப்பட்டது. அன்றைய உலகத்தின் கவனத்தை ஈர்த்த சர்வகலாசாலை ஒன்று இங்கு இருந்தது. ஆகவே அறிவாளிகளுக்கு இப்பட்டணத்தில் பஞ்சமில்லை. இன்றைக்கும், புகழ் மணம் வீசிக் கொண்டிருக்கும் சாக்ரடீஸ் போன்ற தத்துவ மேதைகள் இம்மண்ணுக்குச் சொந்தமானவர்களே. கிரேக்கருடைய ஞானம் வேதாகமத்திலும் இடம் பிடித்துவிட்டது. (1 கொ. 1:22) இப்பட்டணத்திலிருந்து 5 மைல் தொலைவில் துறை முகம் ஒன்று இருந்ததால் வியாபாரத்திலும் சிறந்துவிளங்கிற்று இப்பட்டணத்தைச் சுற்றிலும் புகழ்மிக்க நான்கு மலைகள் இருந்தது. இதன் இயற்கையழகிற்கு மேலும் மெருகேற்றியது. அதைக் காட்டிலும் புகழ்மிக்க 4 குன்றுகள் இப்பட்டணத்திற்குள் இருந்தது. அவைகளில் ஒன்றுதான் "மார்ஸ் மேடை" ஆகும்.

இப்படிப்பட்ட பட்டணம், பவுலின் நாட்களில் தன்னை விக்கிரக வணக்கத்திற்கு முற்றிலுமாக ஒப்புக் கொடுத்திருந்தது இப்பட்டணத்தில் இருந்த விக்கிரகங்களின் எண்ணிக்கையைப் பற்றி ஒரு பிரபலஸ்தர் இவ்விதமாகச் சொல்கிறார். "அத்தேனே பட்டணத்தில் மனிதர்களைக் காட்டிலும் விக்கிரகங்களை எளிதில் பார்க்கலாம்" என்று. கற்பனை வளர்த்திற்கு சிறகு கட்டி, அப்பட்டணத்தின் நிலையை கொஞ்சம் ஊகித்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒரு ஆறுதல் என்னவெனில், தெசலோனிக்கே, பெரோயா பட்டணத்தாரைப் போல இப்பட்டணத்தார் பவுலை ஊரை விட்டுத் துரத்தவில்லை.

வித்தியாசமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட, பட்டணத்திற்குள் இருந்த 4 புகழ்மிக்க குன்றுகளில் ஒன்றுதான் "மார்ஸ் மேடை" என்று பார்த்தோம். இது ஒரு நியாய ஸ்தலம். இம்மேடை மீது ஏறக்கூடிய பாக்கியம் அந்நாளில், அத்தேனே பட்டணத்தில் வாழ்ந்த அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. பட்டணத்தின் "மேன்மை தங்கிய" மக்கள் மட்டுமே அங்கு அடிக்கடி கூடுவர். ஆம், பெரும் பதவிகளில் அமர்ந்து ஆட்சி செய்யும் அரசியல்வாதிகள், முதல் தரமான அரசு அதிகாரிகள், நீதிபதிகள், தத்துவமேதைகள், பெரும் பேச்சாளர்கள் போன்றவர்களுக்குத்தான் இம்மேடை தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருந்தது. சாதாரண ஜனங்களுக்கு மார்ஸ் மேடைப் பக்கம் வேலையே இல்லை. ஆனால், புறஜாதிகளுக்குச் சுவிசேஷம் சொல்ல வேண்டுமென்ற பெருநோக்கோடு தெரிந்தெடுக்கப்பட்ட பவுல், தத்துவ

மேதைகள், பல்கலைக் கழக பேராசிரியர்கள், கனவான்கள், பிரமு கர்கள் அடங்கிய இடத்தில் சொற்பொழிவாற்றும் படியான சிலாக்கி யத்தைப் பெற்றான்.

இவ்வளவு சிறப்புகள் பெற்ற பிரசங்கத்தில், பவுலடியார் அத்தே னரின் மூட நம்பிக்கைகள், உண்மையான தேவன், மனந்திரும்புதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், வரப்போகும் நியாயத் தீர்ப்பு ஆகிய இவைகளைப் பற்றியே பேசுகிறார். ஆயிரக்கணக்கில் பணம் செலவ ழித்து, நூற்றுக்கணக்கில் ஆட்களைத் திரட்டி, கதைவிடும் அநேகப் பிரசங்கிமார்கள் இவருடைய பிரசங்கத்தை ஊன்றிக் கவனித்தால் ஒரு உண்மையைக் கண்டறிய முடியும். தன்னுடைய குலப் பெருமை பற்றியோ, தான் சுற்றி வந்த நாடுகளைப் பற்றியோ, தான் இரட்சிக்கப் பட்ட விதத்தைப் பற்றியோ, தன்னுடைய தியாகத்தைப் பற்றியோ, தான் செய்த அற்புதங்களை பற்றியோ, தனக்கிருக்கும் விசேஷ விவரங்கள் பற்றியோ, தேவன் பெயரால் பொய்யான திட்டங்கள் பற்றியோ, கோபுரம் கட்டுவதைப் பற்றியோ, குளங்கள் வெட்டுவதைப் பற்றியோ, இன்னும் பல கட்டுமானப் பணிகள் பற்றியோ, அப்பணிக ளுக்குத் தேவையான நிதி வசூல் பற்றியோ, கட்டுமான பணியில் ஏற்பட்ட வங்கிக் கடன் பற்றியோ பேசாமல், ஜனங்களின் ஆத்துமத் தேவையை அறிந்து, நேரிடையாக விஷயத்திற்கு வருகிறார். அவரோடு ஒப்பிடும்போது இன்றுள்ள பிரசங்கிகள் கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம் உண்டு.

சரி, மார்ஸ் மேடைப் பிரசங்கத்திலிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அவைகளை தியானிப்போம்.

## I. வசனம். 16, 17 - பவுலின் ஊழிய வாஞ்சை, வைராக்கியம் :-

அத்தேனே பட்டணத்திற்கு வருமுன் தெசலோனிக்கே, பெரோயா பட்டணங்களில், பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஊழியம் செய்து, இங்கு வந்து சேர்கிறார். பெரோயா பட்டணத்திலிருந்து கலகக் கும்பலிடம் சிக்காமல், பவுலை உயிரோடே அனுப்பி விடுவது அப்பட்டணத்தா ருக்குப் பெரும்பாடாகி விட்டது. சமுத்திர வழியாய் அவரை அனுப்பி விடுகிறார்கள் (வரு. 15). ஆனால், ஏற்பட்ட அமளி, துமளியில் தீமோத் தேயும், சீலாவும் அங்கேயே இருக்க நேர்ந்து விட்டது.

தீமோத்தேயும், சீலாவும் தன்னிடத்தில் சீக்கிரமாய் வரவேண்டு மென்று கட்டளை கொடுத்து, அவர்கள் வருகைக்காக அத்தேனே பட்ட ணத்தில் காத்துக்கொண்டுள்ளார். அந்தக்காத்திருப்பு நாட்களை அத்தேனரின் ஆன்மீக நிலையை அறிந்து கொள்ள விரும்பிச் செலவிட்டு, பட்டணத்தை வலம் வருகிறார். ஏன், இன்றைய நாட்களில், வரம் பெற்றவர்களும், அநேகப் பிரசங்கிகளும் ஊழியத்தினிமித்தம் செல்கிறேன் என்று ஊர் சுற்றித்திரிகிறார்களே அப்படி பவுலுக்குத் தெரியவில்லையா? இயற்கை அழகும், புராதனச் சிறப்பும் மிகுந்த பட்ட ணத்தைச் சுற்றிப் பார்க்க அவருக்கு மட்டும் ஆசையிருந்திருக்காதா? நாடுகள் பல கடந்து நற்செய்தி அறிவித்தபடியால் அவருடைய சரீரம் ஒய்வு வேண்டுமென்று கேட்டிருக்காதா? ஆனால் இவை எல்லா வற்றைப் பார்க்கிலும் ஆத்தும பாரம் அவருக்கு மேலோங்கி இருந்தது.

ஆதாயத்திற்காக ஆத்துமபாரம் உள்ளதைப்போல் காட்டிக் கொண்ட பிரசங்கி அல்ல அவர். யாராவது நோட்டீசில் பெயர் போட்டு, மேடை அமைத்து அழைக்கட்டும், பிறகு பிரசங்கிக்கலாம் என்று காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கவில்லை. மாறாக விக்கிரக வணக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆத்துமாக்களை எப்படி விடுவிப்பது என்பது தான் அவருடைய பேச்சும், மூச்சுமாக இருந்தது. ஆகவே தான் ஜெப ஆலயங்களிலும், சந்தை வெளிகளில் எதிர்பட்டவர்களோடு தினந்தோறும் சம்பாஷணை செய்தார். பிரசங்கிகளே! கிறிஸ்தவர்களே! நம்முடைய நிலை என்ன? பவுலுக்கிருந்த வாஞ்சையும், வைராக்கியமும் நமக்கு உண்டா? சிந்திப்போம்.

## II வ.18-ஜனங்கள் எல்லா சமயத்திலும் காரியங் களை சரியாகப் புரிந்து கொள்வதில்லை.

ஆத்தும பாரத்தால் நிறைந்து பவுல் பேசின காரியங்களை அத்தே னரால் புரிந்து கொள்ள முடியவில்லை. பவுலுடைய காலந் தொட்டு இன்றுவரை அநேக காரியங்களில் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கும் மானிடம், சத்தியத்திற்கான அணுகுமுறையில் மட்டும் ஒரு அடி கூட முன்னேறாமல் அப்படியே சிலைபோல் நின்று கொண்டிருக்கிறது. எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளால் கூட பவுல் பேசியதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. வாயாடியாகவும், அந்நியதேவ தைகளை அறிவிக்கிறவனாகவும், நூதனமான காரியங்களைப் பேசுகி றவனாகவும் பவுல் அவர்கள் பார்வைக்குக் காணப்பட்டான்.

இன்னும் கூட நிலைமையில் மாற்றம் இல்லை. சத்தியத்தை சத்திய மாகப் போதிக்கப் புறப்பட்டால் போதுமான வரவேற்போ, மரியாதையோ இல்லை. வீண்பகட்டுகளையும், வேடிக்கைகளையும் ஜனங்கள் எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ள கல்வியா ளர்களாகிலும், சத்தான உபதேசத்தை ஏற்றுக் கொள்வார்களென்று அணுகினால், வேதனையும், விரக்தியுமே மிஞ்சும். கல்வியறிவிற்கும், ஜனங்களுடைய பேச்சுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை.

ஆனால், அதற்காக நாம் சோர்ந்து போக வேண்டிய அவசிய மில்லை. பவுல் மனம் தளர்ந்துவிடவில்லை. உறுது குன்றி நிலை குலைந்து போய்விடவில்லை. வாஞ்சையோடும், வைராக்கியத்தோடும் ஊழியத்தைத் தொடர்ந்தார். வெற்றியும் பெற்றார். நாமும் தூய சத்தியத் தையும், கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த ஒரே சபையைப் பற்றியும், இன்னும் வேதம் வெளிச்சம் போட்டுக் காட்டும் ஏனைய உபதேசங்களைக் குறித்தும் தொடர்ந்து போதிப்போம். வெற்றி பெறுவோம்.

## III. வ. 22, 23-அறிந்ததிலிருந்து., அறியாததைச் சொல்கிறார் :-

எதிர்மறை உபதேசத்தைத் தவிர்த்த ஒரு அணுகுமுறையை இப்பிர சங்கத்தில் நாம் காணலாம். அவர்களுடைய மத நம்பிக்கையை, தேவ பக்தியை மெச்சுகிறார். ஒருவேளை அது மூட நம்பிக்கையாகக் கூட இருந்திருக்கலாம். இருப்பினும், அவர்களுக்கு என்ன இருந்ததோ, அதையே முதலீடாக வைத்து காரியத்தைச் சாதிக்க முயற்சி செய்கிறார். நீங்கள் இதுகாறும் ஏறெடுத்த ஆராதனைகள் தவறு என்று, நேரிடை யாகக் குற்றம் சாட்டி, கூண்டில் ஏற்றி, நீங்கள் பாவிகள் என்று, அவசர கோலத்தில் தீர்ப்பளிக்காமல். "நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று மெல்ல தன்ன ருகில் இழுத்து வருகிறார். அவர்களுக்குள்ளாக இருந்த பக்தியை, மெய்யான தேவ வணக்கத்திற்கு மாற்றப் பாடுபடுகிறார்.

புதிய ஏற்பாட்டில் கர்த்தரை ஏற்றுக்கொண்ட பெரும்பாலோர் மத நம்பிக்கையுள்ளவர்களாகவே இருந்தனர். ஆனால் தவறான நம்பிக்கை யில் சிக்கியிருந்தார்கள். அப். 2-ம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் யூதர்கள் மத நம்பிக்கையுடையவர்கள் தான். அப் 8-ல் சமாரியர்களும், எத்தி யோப்பிய மந்திரியும் மத நம்பிக்கை கொண்டவர்களே, அப். 10-ம்

அதிகாரத்தில் நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நெலியுவைப் பற்றி நாம் சொல்லவே வேண்டாம். தேவையானால் இப்பட்டியலை நீட்டிக் கொண்டே போக முடியும். இவர்களின் மத நம்பிக்கைகள் சரியான அடிப்படையில் இல்லாதிருந்ததினால், ஜீவ மார்க்கத்தை அவர்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது. அவர்களும் மெய்யான உபதேசத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் இன்று பெரும்பாலோருடைய வாதம், சத்தியமே தெரியாத வர்களுக்குத் தான் சத்தியம் சொல்லப்பட வேண்டும் என்பது. இதில் உள்ள பேருண்மையை நான் மறுக்கவில்லை. எங்களுக்கு சத்தியம் தெரியும் என்று நினைக்கும் அனேகர், சத்தியமே தெரியாமல் இருக்கிறார்கள் என்பது தான் யதார்த்த நிலைமை. இப்படிப்பட்டவர்க ளுக்குச் சத்தியம் சொல்வதே குற்றமா? அரைகுறை சத்தியம் ஒருவ னுடைய ஆன்மீக வாழ்வுக்கு வழி காட்ட முடியாது. பாதி உபதேசம் ஒருவனை பரலோகத்திற்கு அழைத்து செல்லாது, முழுமையான சத்தி யத்தை அனைவருக்கும் சொல்லுவோம். பொய்யான நம்பிக்கையில், தவறான உபதேசத்தில் உள்ளவர்களுக்கு சரியான பாதை காட்டுவோம், சத்தியம் அவர்களை விடுதலையாக்கும்.

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா, 8:32).

## IV. வ:30-31 பிரசங்கத்தின் நோக்கத்தை வெளிப் படுத்துகிறார் :-

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதே மனந்திரும்ப வேண்டுமென்று எங்கு முள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் என எச்சரிக்கிறார். இந்நாள் வரை நீங்கள் செய்தது சரி, இனி சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. முடிவெடுக்க வேண்டிய தருணத்திற்கு வந்து விட்டீர்கள் என்று அவர்களை நெருக்குகிறார். மணிக்கணக்காக, அழகாகப் பிரசங் கித்து, இறுதியில் கேட்கின்ற மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லாமலே அநேகப் பிரசங்கிகள் நழுவிவி டுவர். ஒருவேளை சொல்வதை அநேகர் விரும்பாவிட்டால் அடுத் தமுறை வரமாட்டார்களே என்று. இவரோ, மனந்திரும்புங்கள் என்று எச்சரிக்கிறார்.

மனந்திரும்புங்கள் என்று சொல்வதற்கு முன்னால், "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத்

தேடும்படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமான வரல்லவே!!". என்று சொல்கிறார். (வசனம் : 27) மெய்யான தேவனைக் கண்டுபிடிப்பது கொஞ்சம் சிரமம் தான். ஆனால், அது முடியாத காரியம் அல்ல என்பது தான் அதன் பொருள். அதைப் போலவே மெய்யான சபையைக் கண்டுபிடிப்பதும், தெருவுக்கு ஒன்றாக உள்ள இத்தனை சபைகளில் உண்மை எது என்று கண்டுபிடிப்பது இந்நாட்களில் கொஞ்சம் சிரமமே. ஆனால், முடியாது என்று ஒருவராலும் சொல்லமுடியாது. ஆம், முடியாது என்று சொல்வோமானால் நாம் வேதவாக்கியங்களைப் பொய்யாக்குகிறோம்.

மனந்திரும்புங்கள் என்று சொல்கிறாரே, எதற்காக? "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் (அப். 17:31) நியாயத் தீர்ப்பைப் பற்றிய அக்கறையும், பயமும் இல்லாத சந்ததியில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். கிறிஸ்துவின் வருகையும், நியாயத் தீர்ப்பும் அதிநிச்சயம். அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. ஒவ்வொரு நாளைக் கடக்கும் பொழுதும் நியாயத் தீர்ப்பை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டுள்ளோம். வேதாகமத்தின் கடைசிப் புத்தகமாகிய, வெளிப்படுத்தின விசேஷத்தின் இறுதி அதிகாரத்தில் மட்டும் "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்று மும்முறை பொய்யுரையாத' வாக்குமாறாத தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார். (வ.7,12,20).

அருமையான வாசகரே! எல்லாப் பிரசங்கத்தைப் போல, இந்த மார்ஸ்மேடைப் பிரசங்கத்தையும் அற்பமாக எண்ணப் போகிறோமா? வேண்டாம். நாட்களை வீணாகக் கழித்தது போதும், மெய்யான தேவனைக் கண்டு கொள்வோம் மெய்யான சபையைக் கண்டு கொள்வோம், மனந்திரும்புவோம். இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோம். நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்தமாவோம், மறுமையை சுதந்தரிப்போம்!

E.Z.S. ராஜநாயகம்

> **கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.**
>
> **பிலிப். 4 :4**

# கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை

பரிசுத்த ஆவியானவரின் பணி அல்லது கிரியைகள் பற்றிய தொடரில் நாம் இப்போது கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பற்றி பார்ப்போம். இப்பொருள் பற்றி நிறைய தவறான கருத்துக்களும், பல கள்ள உபதேசங்களும் உலா வருவதால், நாம் இதை விரிவாக அலசிப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

"தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லா வற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார் எனக் கிறிஸ் துவைப் பற்றி யோவான் கூறினார். (யோவான் 3 : 34, 35). அதாவது, ஆவியின் வல்லமையை கிறிஸ்து அளவற்ற விதத்தில் பெற்றார், அல்லது ஆவியை பயன்படுத்துவதற்கு அவருக்கு எவ்வித அளவும் (வரையறை) இல்லை. கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றி ருந்தார் என்று கூறும்போது, பிறர் ஆவியை அளவோடு பெற்றிருந் தார்கள் என்று பொருளாகும். எனவே, ஆவியானவரின் வல்லமை அவர்களுக்கு இருந்த போதிலும், அந்த வல்லமையால் செய்யக்கூடிய காரியங்களுக்கு ஒரு அளவு இருந்தது.

உதாரணமாக, பரிசுத்த ஆவியாலும், அக்கினியாலும் இருமுழுக்கு அளிக்கும் வல்லமை கர்த்தருக்கு இருந்தது என நமது பாடங்களில் நாம் பார்த்திருக்கிறோம். (மத்.3 :11). பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர் அளவில்லாமல் பெற்றிருந்தார் (மத். 3 : 13 - 17). இந்த இருமுழுக்குகளை அவர் மட்டுமே கொடுக்கவல்லவராக இருந்தார் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள்.

பரிசுத்த ஆவியானவரின் இருமுழுக்கைப் பற்றிக் கூறும்போது, முதலில், அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே தேற்றரவாளனை அனுப்பு வதாக கிறிஸ்து அவர்களுக்கு வாக்களித்திருந்தார். (யோவான் 14 : 26). அந்த வாக்குத்தத்தம் லூாக். 24 : 19 லும், அப். 1 : 8லும் மீண்டும் கூறப்பட்டது. பின்னர், அப்.2:1-4ல் அப்போஸ்தலர்கள் பரிசுத்த

ஆவியின் திருமுழுக்குப் பெற்றதாக படிக்கிறோம். இது திருமுழுக்கின் அளவிலான பரிசுத்த ஆவி. ஒரு காரணத்திற்காக அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும், அவர்கள் மற்றவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைக் கொடுக்க இயலாதிருந்தனர். அப்படி யானால், அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அந்த அளவிற்கு மட்டுமே கிடைத்திருந்தது.

ஆனால், அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேர் மட்டுமே இருந் தனர். அவர்கள் உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவிக்கக் கட்ட ளையிடப்பட்டிருந்தனர். அதாவது, அவர்களின் கரங்களில் ஒரு பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது என அதற்கு அர்த்தம். அது மட்டு மல்லாமல், சீடர்களின் உலகத் தேவைகளைக் கவனிக்கும் வேலையிலும் அவர்கள் தங்களை ஈடுபடுத்தியிருந்தார்கள் என அப்போஸ்தலர் நடபடி 6ம் அதிகாரத்தில் படிக்கிறோம். இந்த இடத்தில், வசனம் கூறுவதைக் காண்போம். "அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து. நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்தி ருப்போம் என்றார்கள்." (அப். 6 : 2-4).

இப்போது, அப்போஸ்தலர்களுடைய யோசனை பற்றி ஒரு சில காரியங்களைக் கவனிக்கலாம். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை கிறிஸ்தவர்களும் பெறவேண்டுமென்றோ, அல்லது நிச்சயமாக அதை பெற முடியும் என்றோ இன்று வாதாடும் மக்களை நாம் காண்கிறோம். ஆனால் அப்போஸ்தலருடைய நடபடி 6ம் அதிகாரம் வரை, யாரெல்லாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தனரோ, அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை என்று தெளிவாகத் தெரியவருகிறது. சந்தேகமின்றி, அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதற்குக் காரணம், கர்த்தருக்குக் கீழ்ப்ப டிந்த அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறவேண்டுமென்பது கர்த்தரின் திட்டம் அல்ல.

பொதுவாக, எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறவில்லை என்றும், எனவே அற்புதங்கள் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்கள் அடைந்திருக்க

வில்லை என்றும் அப்போஸ்தலர்கள் தெளிவாகப் புரிந்தனர். அவ்வாறான வல்லமையை அவர்கள் பெற்றிருந்தால், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றுள்ள ஏழுபேரை அவர்களிலிருந்து சீடர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லாதிருந்திருக்கும்.

பரிசுத்த ஆவியானவரால் நிறைந்துள்ள ஏழு பேரை தேர்ந்தெடுக்க வேண்டுமென அப்போஸ்தலர்கள் கேட்டுக் கொண்டதைக் கவனிக்கும் போது, சுவையான ஒரு செய்தியாக அது நமக்குத் தெரிகிறது. ஏனென்றால், அற்புதங்களைச் செய்யும் வல்லமையை பெற்றுக் கொள்ளாமலிருக்கும் போதும் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக்க முடியும் எனத் தெரிகிறது அல்லவா? பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பதற்கும், ஒருவர் அற்புதங்களைச் செய்யும் அளவிற்கு பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதற்கும் வித்தியாசம் என்ன? ஆவியின் அளவுகள் வேறுபட்டிருந்தன என்பதே வித்தியாசம் எனத் தெளிவாகத் தெரிகிறது. அப்போஸ்தலர்கள் திருமுழுக்கு அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர். எனவே, அந்நிய மொழிகளில் பேசவும், அற்புதங்கள் செய்யவும் அவர்களால் முடிந்தது. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இந்த சந்தர்ப்பத்தில், பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்த போதிலும், அவர்கள் அப்போஸ்தலருடைய நடபடி 2 : 38ம் வசனத்தில் வாக்களிக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியின் கனிகளை மட்டுமே பெற்றிருந்தனர். அது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவி.

ஆனால் இந்த சீடர்கள் எந்த அளவிலான ஆவியைப் பெற்றுக் கொள்ள இருந்தனர்? அந்த ஏழு சீடர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், "அவர்களை அப்போஸ்தலர்களுக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்" (அப். 6.6) என்பதாக வசனம் கூறுகிறது. அப்படியானால், இது என்னவாயிருந்தது? இதுவே கைளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவி. அப்போஸ்தலர்கள் தான் அவர்கள் மேல் க்கைகளை வைத்தனர். எனவே, கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைக் கொடுக்கும் வல்லமை அப்போஸ்தலர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். இந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அந்த ஏழு சீடர்களும் என்ன செய்யக் கூடியவர்களாக இருந்தனர்? தொடர்ந்து நாம் படிக்கும் போது,"ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்க

ளையும் செய்தான்" (அப். 6:8) என்பதாகப் பார்க்கிறோம். மற்றவர்களுடைய காரியம் என்ன? இதுபோலவே அவர்களும் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். ஆனால் அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதற்கு முன்பு இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்யக் கூடாதவர்களாக இருந்தனர்.

கைகளை வைக்கும் அளவிலான பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்ட அந்த ஏழு பேர்களும் அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாகவும், அந்நிய மொழி பேசக்கூடியவர்களாகவும் இருந்த போதிலும், அவர்களால் அந்த வல்லமையை பிறருக்கு அளிக்க இயலவில்லை. உதாரணமாக, பிலிப்பு கிறிஸ்துவைப் போதிக்க சமாரியாவிற்குச் சென்றான். அங்கே, "அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது; அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று". (அப். 8: 7-8). "சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்". (அப். 8 : 14 -17).

முன்பு குறிப்பிட்டது போல், அப்போஸ்தலர்களால் கைகள் வைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையை ஏழு பேரும் பெற்றுக் கொண்ட போதிலும், அந்த வல்லமையை பிறருக்கு அவர்களால் கொடுக்க முடியவில்லை. அவ்வாறு கொடுக்க முடிந்திருந்தால் அவர்கள் தங்களுடைய நண்பர்களுக்குக் கொடுத்திருப்பார்கள். காரியங்கள் கட்டுப்பாடற்றுப் போயிருக்கும். அப்போதைய நிலைமையின்படி, சில கிறிஸ்தவர்களின் மேல் கைகளை வைத்து, அவர்களுடைய ஊழியத்திற்கு உதவக்கூடிய வகையில், அற்புதங்களைச் செய்யும் வல்லமையை அவர்கள் அடைந்திட, அப்போஸ்தலர்கள் சமாரியாவிற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அனைவரும் இந்த வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. உதாரணமாக, மாயவித்தைக்காரனான சீமோன் / தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தான். அதோடு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அடைய விரும்பினான். அதற்காக அப்போஸ்தலர்களுக்குப் பணம் கொடுக்கவும் தயாரானான். ஆனால் அவனுடைய பாவத்திற்காக

அவன் கடிந்து கொள்ளப்பட்டு, பின்னர் மனந்திரும்பிய போதிலும், அவன் பேரில் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவனுக்கு வழங்கவில்லை. இப்படிப்பட்ட வல்லமை ஒரு வேளை அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், சந்தேக மின்றி அவன் அதை தவறாகப் பயன்படுத்தியிருக்கக் கூடும்.

எபேசு பட்டணத்தில், சீடர்களின் குழு ஒன்றுடன் பவுல் தொடர்பு கொள்ளுவதாக, பின்னர் அப்போஸ்தலர் நடபடி 19ம் அதிகாரத்தில் காண்கிறோம். அவர்கள் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றிருந்தனர் என்ற போதிலும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அவர்கள் கேள்விப் பட்டிருக்கவில்லை. பவுல் அவர்களுக்கு உபதேசித்து, இயேசு கிறிஸ் துவின் நாமத்திலே அவர்களுக்கு திருமுழுக்குக் கொடுக்கிறார். அதன் பின்னர், நாம் படிக்கிறோம்: "அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்க தரிசனஞ் சொன்னார்கள். (அப. 19:6)

நிச்சயமாக, நாடு முழுவதுமாக பல சீடர்களின் பேரில் அதாவது, பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ள தகுதியுள்ள, ரீதியான, நேர்மையான மக்களின் மேல் அப்போஸ்தர்கள் தங்கள் கைகளை வைத்தனர். கிறிஸ்துவின் காரியங்கள் வளர்ச்சியடையவும், பிராந்திய சபைகள் முதிர்ச்சியடையவும் இது வழி வகுத்தது.

ஆனால், அப்போஸ்தலர்கள் அனைவரின் மரணத்திற்குப் பின்னர், மேலும் அவர்கள் யார் பேரில் எல்லாம் கைகளை வைத்தார்களோ அவர்கள் எல்லாரும் மரணமடைந்த பின்னர், அற்புதங்கள் நடைபெற்ற காலம் முடிவுக்கு வந்துவிட்டது. அற்புத அடையாளங்களுக்கு பின்னர் அவசியம் இல்லாமற் போயிற்று. ஏனென்றால், இந்தக் காலத்தில் புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது நமக்கு ஒரு நல்ல வழிகாட்டி உள்ளது. ஏனெனில் நமக்கு வழிகாட்டவும், நம்மை நடத்திச் செல்லவும் புதிய ஏற்பாடு உள்ளது. இன்றைய நாட்களில் அப்போஸ்த லர்கள் யாரும் இல்லாததாலும், அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்ற மக்களும் யாரும் இல்லாத தாலும், இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவர்கள் எவரும் இல்லை; அல்லது கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியை அடைந்தவர்களும் யாரும் இன்று இல்லை. இதை மறுப்பவர்கள் ஆவியானவரின் வார்த்தைகளை மறுக்கி றார்கள். இது அவர்களிடம் ஆவியின் கிரியை இல்லை என்பதை நிரூபிக்கிறது.

J.C. சோட்

## பெண்கள் பகுதி

# பெண்ணுரிமை

உலகம் வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாக வளர்ந்துவரும் விஞ் ஞானம் தரும் பலவிதமான நூதன கண்டுபிடிப்புகள் உலகத் தைச் சுருக்கி ஒரு மூலையிலே நடைபெறுகிற ஒரு சிறு காரியம் கூட மறுகோடியில் வாழுகிற ஒரு மனிதன் நொடி நேரத்தில் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆக ஒரு குறிப்பிட்ட நாட்டின் நாகரீகம், பழக்கவழக்கங்கள் வாழ்க்கைமு றைகள் எளிதில் மற்றவர்களையும் ஈர்த்துக் கொள்ளுகிறது.

குறிப்பாக பெண் இனம் சமீப காலங்களில் மாபெரும் மாற்றத் தை அடைந்து கொண்டு வரு கிறது. சம உரிமை, பெண்ணு ரிமை, பெண்கள் விடுதலை இயக்கம் என்று புதிய புதிய அமைப்புகள் உருவாகி பெண் ணினத்திற்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு போர்க்கொடி உயர்த்தி ஆவேசமாகக் கத்தி தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகின்றன. அவர்கள் போராடுவதில் நியாயம் இல்லை என்று ஒதுக்கிவிட முடியாது. ஒரு சில சமுதாயத்திலும், வீடுகளிலும் பெண்ணினம் பல கொடுமை களைத் தாங்கிக் கொண்டு வாயில்லாப் பூச்சிகளாக, ஊமைகளாக நடத்தப்படுகி றார்கள் என்பது ஓரளவு உண் மைதான். இவைகளுக்கெல்லாம் இயல்பான காரணங்கள் இல் லாமல் இல்லை.

1) சரீரப் பிரகாரமாக பெண்கள் ஆண்களைப் போல பலமுள்ள உடல் வாகு உடைய வர்கள் அல்ல. இது சில விசயங் களில் இப்படிப்பட்ட விளைவு களை ஏற்படுத்தலாம். அந்தப்படி புருஷர்களே மனைவியானவள் பெலவீன பண்டமாயிருக்கிற படியால் உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்கிறவர்களானபடியினால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தை செய்யுங்கள் (1 பேதுரு 3.7) "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து ....."

"தங்கள் சரீரங்களாக பாவித்து அவர்களில் அன்பு கூற வேண்டும். தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்

தானே அன்பு கூருகிறான்" (எபே 5 : 25, 28, 29) என்றெல்லாம் வேத வாக்கியங்களும் அவர்களுக்காகப் பரிந்து பேசுகின்றன. ஆனால் உலக நடைமுறையில் அப்படியில்லை. இயற்கையிலேயே சரீர பலவீனமுள்ளவர்களாக இருப்பதை தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு ஆண்கள் பெண்களைக் கொடுமைப்படுத்துகின்றனர். சில வேலைகளில் ஆண்கள் மனைவிமார்களை வேலைக்காரியைப் போலவும், அடிமைகளாகவும் நினைத்துக் கொண்டு அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதோ அவர்கள் மீது அன்பு காட்டுவதோ இல்லை.

2) வாழ்க்கை முறையிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. பெண்கள் குழந்தைகளைப் பெற்று அத்துடன் வளர்க்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளும் வகையில் அவர்கள் உடல்வாகும், மனப்பாங்கும் உடையவர்களாக இருக்கிறார்கள். கணவன்மார்களோ வெளியில் சென்று குடும்பத் தேவைகளுக்காக சம்பாதிக்கும் திடமான சரீரமும் சாமர்த்தியமும் உடையவர்களாகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள். சமுதாயத்தில் ஒரு குடும்பத்தின் அந்தஸ்து அந்த குடும்பத் தலைவரின் ஆற்றலையும் குடும்பத்தலைவியின் பொறுப்புணர்ச்சியையும் பொறுத்தே அமைகிறது. இதைக் குறித்து "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால் அவன் விசுவாசத்தை மறுதலிக்கிறவனும், அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்." எந்று ஆண்களுக்கு புத்திமதி கூறியும் (1 துமோ 5, 8) அதே அதிகாரத்தில் இன்னும் கொஞ்சம் கீழே வாசித்தால் பிள்ளைகளைப் பெறவும் வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாகமலிருக்கவும் வேண்டும் என்று பெண்களுக்கும் புத்தி சொல்லப் பட்டிருக்கிறது (1 தீமோ 5.14) பேதுரு இதைப்பற்றிச் சொல்லும் போது பெண்கள் புருஷன்மார்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்றும் புருஷர்களும் மனைவிகள் பலவீனமானவர்கள் என்பதை கருத்தில் கொண்டு விவேகத்தோடு அவர்களுடனே வாழவேண்டும் என்று புத்திமதி கூறி யிருக்கிறார் (1பேதுரு 3,4,7).

ஆனால் இவைகளையெல்லாம் சமுதாயம் புறக்கணித்து விட்டு உலகின் பல்வேறு பகுதிகளில் பெண் குழந்தைகளை ஆண் குழந்தைகளை விட குறைவாக மதிப்பிட்டு அவர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக எண்ணி நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு கல்வியறிவு உட்பட பல சௌகரியங்கள் மறுக்கப் பட்டு வந்துள்ளன. அதன் காரணமாக வெளியே பெண்கள் வே

லைக்குப்போக நேரிட்டால் அவர் களுக்கு குறிப்பிட்ட சில துறைகளை மட்டும் ஒதுக்கியும் குறிப்பிட்ட சில வருவாய் குறைந்த வேலைகளிலே அமர்த் தப்படுகிறார்கள். சில வேளை களில் வேலைக்குப் போகிற பெண்கள் தங்கள் குழந்தைக ளையும் கூட அழைத்துச்சென்று தங்கள் கடினமான வேலைப்ப ளுவோடு கூட குழந்தைப் பராம ரிப்பையும் கவனிக்க வேண்டி யுள்ளது. அதோடு நிற்காமல் பகல் எல்லாம் வேலை செய்து விட்டு வீட்டுக்கு வந்தோம் சாப்பிட் டோம், இளைப்பாறினோம் என்று சொல்வதற்கு முடியாமல் வீட்டில் சமையல் வேலைக ளையும் துணிமணி துவைக்கும் வேலைகள் போன்றவைகளையும் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவைகளெல் லாம் வேதாகமத்தின் போதனை களும் தேவனுடைய படைப்பு நோக்கங்களுக்கும் முரணான வைகள்.

3) தேசியத் தலைவர்களாக உயர்ந்து நிற்கும் ஆணினம், பெண்மையை கௌரவித்து அவர்களுடைய பெண்மை பாது காக்கப்பட வேண்டும் என்ற நினைவில் அவர்களுடைய தன் மைக்கேற்ற வேலைகளை மட்டும் கொடுத்துவிட்டு கடினமான பணிகளுக்கு அவர்களை ஒதுக்கி விடுகிறார்கள். வரலாற்றைப் புரட்டிப் பார்த்தீர்களானால் தேசிய மட்டத்துக்கு உயர்ந்த தலைவர்களின் பட்டியலில் பெண்மணிகள் மிகமிகக் குறை வாகவே இருப்பார்கள். அவர்கள் போர்முனையில் வேலை செய்வ தற்கும், மனிதர்களை மேய்க்கும் கண்காணிப்பு வேலைகளிலும் அமர்த்தப்படுவதில்லை. 1 கொரி. 11, 3ல் "ஒவ்வொரு புருஷ னுக்கும் கிறிஸ்து தலைவராயிருக் கிறாரென்றும் ஸ்திரீகளுக்குப் புருஷன் தலையாயிருக்கிறா னென்று கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்" என்கிறது. இது தான் உண்மை நிலை. ஆதியில் மனிதனுக்கு துணையாகவும் அதாவது மனிதன் தனிமையில் பூரணமுடையவன் அல்ல என்ப தைக் கண்டு தேவன் பெண் ணைப் படைத்தார். ஆதாமைப் பற்றி தேவன் மனிதன் தனிமை யாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக் குவேன் என்று கூறி . . . ஆதமுக்கு அயர்ந்த நித்திரையை வரப் பண்ணினார். அவன் நித்தி ரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையி னால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தான் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவனை மனுஷனி டத்தில் கொண்டு வந்தார்.

அப்பொழுது ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் (ஆதி 2 : 18 - 23) என்றான்.

படைக்கப்பட்ட பொழுது ஏவாளுக்கிருந்த சமநிலை உரிமையைப் பாவம் பறித்துக் கொண்டது. சாத்தானுடைய வஞ்சப்பேச்சில் மதி மயங்கி கட்டளையை மீறி விலக்கப்பட்ட கனியைப் புசித்த நாளில் அந்த சமநிலைத் தன்மை மாறுதலுக்குள்ளானது. அவள் பாவம் செய்ததுமல்லாமல் அவள் ஆதாமையும் பாவம் செய்ய இசைய வைத்தாள். அவருடைய கீழ்ப்படியாமைக்கு தண்டனையாகவும் எதைச் சொன்னாலும் வெகுளித்தனமாக நம்பிக் கொள்ளும் சுபாவத்திலிருந்து அவளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு அவளை புருஷனுடைய கண்காணிப்பில் இருக்கும்படி தேவன் கொஞ்சம் தாழ்த்திப்போட்டார் .... "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்வான்" என்றார். (ஆதி 3 : 16) தேவன் கிருபையாக ஆண் வர்க்கத்துக்குத் தந்த இந்த சிலாக்கியத்தை சில ஆண்கள் தவறாகப் பயன்படுத்துவதாலேயும் பொதுவாக ஆண்கள் ஆதிக்கத்தில் இருக்கும் சமுதாய அமைப்பில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி காரணமாகவும், அடக்கி வைக்கப்பட்ட பெண் வர்க்கம் தங்கள் உரிமைக்காகப் போராடும் போக்கு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பெருகிக் கொண்டு வருகிறது.

சில காரியங்களில் அப்புரட்சி சில நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. பெண்கல்வி குடும்ப வாழ்க்கைக்கு நல்ல பயன்களைக் கொடுத்திருக்கிறது. கணவன் மனைவிமார்களுக்குள் புத்திசாலித்தனத்திலும் உணர்ச்சிகளிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்திருக்கிறது. ஒரு படித்த பெண் சிறந்த தாயாக விளங்க முடிகிறது. குழந்தைகளுடைய தேவைகளைச் சந்திப்பதிலும் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உதவுவதற்கும் பேருதவியாக இருக்கிறாள்.

பெண்கள் சில துறைகளில் வியப்புமிக்க வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவத் துறைகளிலும் அவர்கள் ஆற்றிவருகிற சேவை போற்றத்தக்கது. இலக்கியத்துறைகளிலும், கலைத்துறைகளிலும் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளிலும் அவர்களுடைய பங்கு சிறப்பாக உள்ளது. ஆனால் பெண்ணுரிமை கோரும் இயக்கங்கள் தேவன் பெண்களை என்ன நோக்கத்திற்காக சிருஷ்டித்தாரோ அதன் எல்லையை மீறிச் செல்லுவதாக இருக்கிறது.

அது பல பிரச்சனைகளை உருவாக்கிக் கொண்டு வருகிறது. இந்த வகையில் முதலில் பாதிக் கப்பட்டது குடும்ப அமைப்பு. அநேக பெண்களை ஆபீசுக ளிலும் இதர பணிமனைகளி லிலும் பணியாற்றுபவர்கள் திருமணம் செய்து கொள்வதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. புருஷன் மனைவிக்குள்ளேயே யார் பெரியவர் என்ற மனப் போக்கு வளர்ந்து வருகிறது. வெளியில் சென்று 10 மணி 12 மணிநேரம் பணியாற்றுகிற ஒரு பெண்ணுக்கு இல்லற வாழ்க் கையில் கணவன் - மனைவி உறவுக்குப் போதிய நேரம் ஒதுக்க முடிவதில்லை. அல்லது திருமணத்தின் தலையாய நோக்கத்திற்கிசைவான குடும்ப வாழ்க்கை வாழ முடிவதில்லை. தானும் சம்பாதிக்கிறோம் என்ற மமதை சில பெண்களுக்கு திருமண வாழ்கையின் சீரிய நோக்கத்தை குலைத்துப் போடு கிறது. நூற்றுக்கு 25 முதல் 50 சதவீத குடும்பங்களில் சண்டை யும், சச்சரவும் மலிந்து வாழ்க்கை கசக்கிறது. சிலவகைகள் விவாக ரத்திலே போய் முடிகிறது. அதன் விளைவாக குழந்தைகள் போதிய பராமரிப்பு இல்லாமல் அனாதை களாகி துன்பப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் விரக்தி மேலீட்டால் சமுதாயத்தில் காணப்படும் தீமையான பழக்க வழக்கங்களாகிய மது அருந்துல், போதை மருந்துக்கு அடிமையாதல் இன்னும் எத்தனையோ தீமைக ளுக்கு இலக்காகிறார்கள்.

குடும்பம் என்பது சமுதா யத்தின் அஸ்திபாரம், அஸ்தி பாரமே நிலைகுலையும் போது கட்டிடமாகிய சமுதாயமும், நாடும் சீரழிவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. தேவன் திட்டமிட்ட குடும்ப அமைப்பு சீர்குலையாமலி ருக்க பெண்கள் தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து தங்க ளுடைய கடமையில் தவறால் இருக்க வேண்டும். தேவன் தம்முடைய சர்வ ஞானத்தால் கவனமாகச் செய்திருக்கிற ஒழுங்கு முறைகளை வேதாக மத்தில் பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த மனிதரைக் கொண்டு எழுதி வைத்திருக்கிறார். அதற்கு மிஞ்சிய ஒரு திட்டத்தை எந்த ஒரு மனிதனும் வகுத்துத் தந்துவிட முடியாது. ஆகவே, சகோதரிகளே தேவனுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டு திருப்தி அடையலாம்.

B.B. சோட்
R.R. நாயகம்

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.

பிலி. 4 : 13

# நற்செய்தியின் வல்லமை

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" (ரோமர் 1 : 16, 17) என அப்போஸ்தலர் பவுல் ரோமர்களுக்கு எழுதினார். இவ்விரு வசனங்களிலும் நிறைய காரியங்கள் சொல்லப்பட்டுள்ளன. எனவே, அவை நமக்கு என்ன கருத்துக்களை கூறுகின்றன என்று பார்ப்போம்.

நற்செய்தி என்றால் என்ன? எதுவாக இருப்பினும் அதற்காக தான் வெட்கப்படவில்லை என்று பவுல் கூறுகிறார். அவர் ஏன் வெட்கப்பட மாட்டார் என்றால், இரட்சிப்படைய தேவனுடைய வல்லமை அதுவே. அதாவது, இரட்சிப்பளிக்கும் வல்லமையை நற்செய்தி பெற்றுள்ளது. அது மட்டுமல்ல, அதன் வழியாக தேவனுடைய நீதி ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, நற்செய்தி என்னவென்று நாம் கண்டுபிடிக்க முடிந்தால், தேவனுடைய வல்லமையின் இருப்பிடத்தை நாம் தீர்மானிக்க முடியும்.

1 கொரிந்தியர் 15 : 1 -4 வசனங்களில் பவுல் கூறுகிறார் : "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக் கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்". எனவே, நற்செய்தி என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு என்பவை மட்டுமே என பவுல் கூறுகிறார். அதை அவர் பெற்றுக் கொண்டிருந்ததாகவும், அவர்களுக்கு அதை போதித்திருந்ததாகவும், அதை அடைந்தவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள் என்றும் அவர் கொரிந்தியர்களுக்குச் சொன்னார்.

ஆனால் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு எவ்வாறு ஒருவரை இரட்சிக்கும்? வேறு விதமாகக் கூறினால், நமது வாழ்வில் இந்த உண்மைகளைக் கடைப்பிடித்து, எவ்வாறு அவற்றின் மூலம் நாம் இரட்சிப்பை அடையக்கூடும் முதலில், இவை அனைத்தும் நாம் விசுவாசிக்க வேண்டிய உண்மைகள் என்பதை நாம் உணர வேண்டும். இரண்டாவதாக, ரோமர்கள் அந்த உபதேசச் சட்டத்திற்குக் கீழ்ப் படிந்தனர் என அதே எழுத்தர் - அப்போஸ்தலர் பவுல், கூறுகிறார். ரோமர் 6ம் அதிகாரத்தின் முற்பகுதியில், அவர்கள் எவ்வாறு தங்கள் பாவங்களுக்கு மரித்திருந்தனர் என்றும், திருமுழுக்கு என்னும் தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டிருந்தார்கள் என்றும், அதன்பின்னர் எவ்வாறு தண்ணீராகிய கல்லறையிலிருந்து எழுந்து புதிய வாழ்வில் நடக்க வெளிவந்தனர் என்றும் அவர் காட்டுகிறார். அதாவது, கிறிஸ்து மரித்திருந்தார். அடக்கம் செய்யப்பட்டிருந்தார், பின் உயிர்த்தெழுந்தார். அவர்களுடைய கீழ்ப்படிதல் மூலமாக அவற்றின் சாயலுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தனர். ''முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள், ''(ரோமர் 6 : 17, 18) என அவர் முடிக்கிறார். இப்போது கவனமாகப் பாருங்கள். அவர்கள் பாவத்திற்கு அடிமையாக இருந்தனர். இப்போது நீதிக்கு அடிமையாயிருக்கின்றனர். இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது எது? அவர்களை விடுவித்த உபதேசச் சட்டத்திற்கு மனப்பூர்வமாக அவர்கள் கீழ்ப்படிந்திருந்தனர். அக்கோட்பாட்டிற்கு அல்ல, அதன் சாயலுக்கு கீழ்ப்படிந்திருந்தனர். அச்சட்டம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகும். அவர்கள் விசுவாசிக்கவேண்டிய உண்மைகளாக அவை இருந்தன. ஆனால் அவர்கள் அந்த உபதேசச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தனர். அவர்கள் கீழ்ப்படியக்கூடிய ஒரு சாயலாக இருந்தது. நற்செய்திக்குக் கீழ்ப்படியும் காரியத்தில், அவர்கள் பாவங்களுக்கு மரித்தனர், தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டனர், இது திருமுழுக்கு எனப்பட்டது. பின் தண்ணீரிலிருந்து வெளியே வந்தனர். இவ்வாறு செய்ததின்மூலம், அவர்களுடைய கீழ்ப்படிதலில், நமது கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றின் மாதிரியை அடையாளமாக படம் பிடித்துக் காட்டினர். தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை செலுத்தும்படி கர்த்தர் மீண்டும் வருகிறார் என புவல் கூறுகிறார். (2 தெச. 1:7-9) ''நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" என பேதுருவும் கூறுகிறார். (1 பேதுரு 4 : 17). மீண்டும்,

நற்செய்திக்கு எவ்வாறு ஒருவர் கீழ்ப்படிய முடியும்? அது மிக எளிது. நற்செய்தியானது உண்மைகளை மட்டுமல்லாது, கட்டளைகளையும் கொண்டுள்ளது. கிறிஸ்துவே கூறினார் : "..... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". (மாற்கு 16 : 15, 16). பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் பெந்தெகொஸ்தே நாளிலே நற்செய்தியைப் போதித்தனர். நற்செய்தியின் சத்தியங்கள் அறிவிக்கப்பட்டு, கேட்டவர்களின் இருதயங்களில் விசுவாசம் உண்டான பின்னர், "..... சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று கூறினார். (அப். 2 : 37, 38). அதன் விளைவாக, ஏறக்குறைய 3000 பேர் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (அப். 2 : 41, 47). அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதையும் படித்துப்பாருங்கள். அங்கே அநேக மனந்திரும்புதல்கள் மீண்டும் மீண்டுமாக ஏற்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவதையும் காண்பீர்கள்.

சுவிசேஷத்தை நற்செய்தி என பவுல் விமர்சித்தார். (ரோமர் 10 : 15). நற்செய்தி என்னவென்றும், அது ஒருவனிடத்தில் என்ன செய்யக் கூடும் என்றும் நீங்கள் அறியும் போது, அது ஏன் நற்செய்தி என அழைக்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்வீர்கள். இந்த நற்செய்தி உலகமெங்கும் நிச்சயமாக தெரியவேண்டும் என்பதற்காக, கர்த்தர் அதை உலக முழுவதும் அறிவிக்கக் கட்டளையிட்டார். (மாற்கு 16 : 15).

எனவே, விசுவாசிக்கும் ஒவ்வொருவனும் இரட்சிப்படைய, நற்செய்தியானது தேவனுடைய வல்லமையாக இருக்கிறது. நற்செய்தியின் மூலமாக, நற்செய்தியைக் கொண்டு தேவன் வீழ்ந்து போனவர்களை மீட்கிறார். அதற்கு ஈடு இணை ஏதுமில்லை. ஒருவர் எத்திசையில் திரும்பினாலும், கிறிஸ்துவின் நற்செய்தியின் வல்லமைக்கு ஒப்ப ஒன்றைக் காண முடியாது. வல்லமை அதற்கு இருந்த போதிலும், ஒருவன் நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும். அதின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படிச் செய்தால் தான் அதோடு தொடர்பு கொள்ளலாம். பின்னர், அவனுக்கு இரட்சிப்பு உண்டு, நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கை உண்டு. உலகில் எல்லா பகுதிகளிலும் நற்செய்திக்கு மேலான ஒரு பெரிய சக்தி வேறு எதுவும் இல்லை.

தமிழில் : எஸ். எஸ். ராஜன்

# இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நான் ஏன் விசுவாசிக்கிறேன்?

நசரேயனாகிய இயேசு என்பவர் மனிதனுடைய கற்பனையில் உதித்த, ஒரு உண்மையற்ற உருவம் அல்ல. என்னையும் உங்களையும் போல ஒரு உண்மையான மனிதனாக இருந்தார். 33 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து, பின் மறைந்தார்.

இயேசு பூமியில் வாழ்ந்ததை மனித சரித்திரம் நிரூபிக்கிறது. முதல் நூற்றாண்டில் 53ம் ஆண்டிலே பிறந்த 'கொர்நேலியுஸ் தாசிதஸ்' என்னும் ரோம சரித்திர ஆசிரியன் கிறிஸ்துவைப் பின்பற்றியவன் அல்ல என்ற போதிலும், திபேரியஸ் மன்னன் ஆண்டு வந்த காலத்திலே, பொந்தியுபிலாத்து என்ற ரோர்மை கவர்னரால் கிறிஸ்து மரண தண்டனை பெற்றார் என்ற உண்மையைக் குறிப்பிட்டுள்ளார். 'பிளேவியஸ் ஜோசபஸ்' எனும் யூத சரித்திர ஆசிரியன் 37ம் ஆண்டில் எருசலேமில் பிறந்தவர். அவர் கிறிஸ்துவைப் பின்பற்றியவர் அல்ல. என்றாலும், இயேசு அற்புதங்களைச் செய்தார் என்றும், மக்களுக்குப் போதித்து வந்தார் என்றும், யூதத் தலைவர்களின் நிர்ப்பந்தத்தின் காரண மாக பிலாத்துவால் சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்கப்பட்டார் என்றும் எழுதினார். உலக சரித்திர ஆசிரியர்களின் இந்த அறிக்கைகள், வேதாகமத்தில் காணப்படும் இயேசுவைப் பற்றிய அறிவிப்புகளோடு முற்றிலும் ஒத்துப்போகின்றன. சரித்திரத்தில் இடம் பெற்ற ஒரு உண்மையான நபராக அவர் இருந்தார்.

நசரேயனாகிய இயேசு ஒரு மாபெரும் மனிதராக இருந்தார். அவர் ஒரு மனிதனைவிட மேலானவராக இருந்தார். அவர் ஒரு பெரிய தீர்க்கதரிசி; ஆனால், ஒரு தீர்க்கதரிசியை விட அவர் அளவற்ற பெரியவராக இருந்தார். ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாக இயேசு இருந்தார், இன்றும் இருக்கிறார்.

தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றியபடியால், இயேசுவை தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கிறேன். இவ்வுலகத்திற்கு தமது குமாரனை அனுப்புவதற்கு முன்பு, தமது குமாரன் வாழப்போகும் வாழ்க்கையைப் பற்றி பல உண்மைகளை தேவன் வெளிப்படுத்தியிருந்தார். வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டுப் பகுதியில் இந்த உண்மைகளை அவர்

முன்னுரைத்தார். இயேசு பிறப்பதற்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தாவீது இராஜா எழுதிய பல சங்கீதங்களில் அவர் பலவற்றை முன்னுரைத்தார் /: ஒரு நண்பனால் இயேசு காட்டிக் கொடுக்கப்படுதல் (41 :9); கசப்பான காடியை இயேசுவுக்குக் குடிக்கக் கொடுத்தது (69 : 21); அவர் சிலுவையில் அறையப்பட்டபோது, கைகளையும் கால்களையும் உருவக் குத்தியது (22 : 16); அவருடைய சிலுவை மரணத்தின் போது சேவகர்கள் அவருடைய வஸ்திரங்களை, தங்களுக்குள்ளே பங்கிட்டு, அவருடைய உடையின் பேரில் சீட்டுப் போடுதல் (22 : 18); மக்களின் பரியாசம் (22 : 7-8); அவருடைய எலும்புகள் முறிக்கப்படாதது (34 : 20); மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தது ( 16 : 10) ஆகிய அனைத்தும் முன்னுரைக்கப்பட்ட உண்மைகளாகும்.

தேவனின் மக்களை ஆளப் போகிறவர் பெத்லகேமிலிருந்து வருவார் என, ஏறக்குறைய கி.மு. 700ம் ஆண்டில் மீகா தீர்க்கதரிசி மூலமாக வெளிப்படுத்தினார். (மீகா 5:2). ஆனால், இயேசுவின் தாயாகிய மரியாள், இயேசு பிறப்பதற்கு முன், கலிலேயாவிலுள்ள நசரேத்தில் வசித்து வந்தாள். நசரேத் பெத்லெகேமிலிருந்து ஏறக்குறைய 100 கிலோமீட்டர்கள் (65 மைல்கள்) தூரத்தில் இருந்தது. இயேசு பிறப்பதற்குக் கொஞ்சம் முன்பு, ரோமச் சக்ரவர்த்தியாகிய சீசராகிய அகஸ்துஸ் நாடெங்கும் வரிகட்ட வேண்டுமென ஒரு உத்தரவிட்டான். அதன்படி, ஒவ்வொரு குடும்பமும், தங்களின் முன்னோர்களுடைய நகரத்திற்குச் சென்று இவ்வரியைச் செலுத்தவேண்டுமென அவன் பணித்தான். யோசேப்பின் (மரியாளுடையவும்) முன்னோர்கள் பெத்லெகேமில் வசித்து வந்தபடியால், அந்த சிறிய நகரத்திற்கு அவர்கள் பயணப்பட்டனர். மரியாள் அங்கிருந்த வேளையில், இயேசுவைப் பெற்றெடுத்தாள். இவ்வாறாக, மீகா 700 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

ஏசாயாவும் கிட்டத்தட்ட அதே சமயத்தில் (கி.மு. 700) தீர்க்கதரிசனமாக உரைத்தார்.ஏசாயா மூலமாக தேவன் முன்னுரைத்ததாவது : ஈசாவின் குடும்பத்திலிருந்து இரட்சகர் தோன்றுவார் (ஏசாயா 11 : 1 -5); அவர் ஒரு கன்னிகையிடமிருந்து பிறப்பார். (7 : 14); இயேசுவுக்கு முன்னோடியாக ஒருவர் வனாந்தரத்திலே போதிப்பார் (40 : 3); கலிலேயாவிலே இயேசு போதிப்பார் ( 9 :1-2); அவருடைய மக்கள் அவரை புறக்கணிப்பர் (53 : 3); அவர் விசாரிக்கப்படும் வேளையிலே தமது சொந்த விடுதலைக்காக எதுவும் பேசமாட்டார் (53:7); நமது பாவங்களுக்காக அவர்

கசையடிபட்டு, மரணத்தைச் சந்திக்கவிருந்தார். (53 : 5-6,8); பாவிகளுக்காக அவர் ஜெபிப்பார் (53: 2); அவருடைய மரணம் துன்மார்க்கர், செல்வந்தர்கள் மத்தியிலே நடக்கும் (53:9).

சற்றேறக்குறைய கி.மு. 500ம் ஆண்டு வாக்கில் சகரியா மூலமாக தேவன் முன்னுரைத்தார். கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மயிரின் மேலும் ஏறி எருசலேமிற்குள் வெற்றியுடன் இயேசு பிரவேசிப்பார் (சகரியா 9 : 9); 30 வெள்ளிக் காசுகளுக்காகக் காட்டிக் கொடுக்கப்படுவார் (11 : 12 - 13); அவருடைய சீடர்கள் சிதறி ஓடிப் போவார்கள் (13 : 7). அவர் குத்தப்படுவார் என்பது ஒரு ரோமச் சேவகன் இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்திய போது நிறைவேறிற்று. (12 : 10).

தேவனுடைய குமாரனை நாம் தெளிவாக அடையாளங் காணும் பொருட்டு, அவர் வருவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் முன்பே, அவருடைய குமார னைப் பற்றி முன்னூறுக்கும் அதிகமான தீர்க்க தரிசனங்களை தேவன் தந்தார். ஒவ்வொரு தீர்க்க தரிசனமும், நசரேயனாகிய இயேசுவின் வாழ்நாட்களிலேயே, அவர் உண்மையிலேயே தேவனு டைய குமாரன் என்பதைக் காட்ட, முழுவதுமாக நிறைவேறிற்று. இயேசுவின் வாழ்க்கையைப் போல, வேறு எந்த ஒரு மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றியும் சரித்திரத்தில் இவ்வாறு முன்னுரைக்கப்பட்டதில்லை.

கன்னியிடத்தில் பிறந்ததால், இயேசுவை தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கி றேன். காபிரியேல் என்ற தூதன் மரியாள் என்ற பேருடைய கன்னிக்கு தரிசனமாகி அவளி டம், ''மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப் படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என் றான். அதற்கு மரியாள் தேவ தூதனை நோக்கி, இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக் குப் பிரதியுத்தரமாக : பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப் படும்" என்று கூறினான். (லூக்கா 1 : 30-35). யோசேப்பு என்பவருக்கு மரியாள் ஏற்கனவே திருமணத்திற்காக நிச்சயிக்கப்பட்டிருந்தாள். மரியாள் ஒரு குழந்தைக்கு தாயாகப் போவதைக்

கண்டுபிடித்த யோசேப்பு இயற்கையாகவே மிகவும் சஞ்சலமடைந்தாள். இதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில், "கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றன் . . . . யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு; அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்." (மத். 1 : 20 - 21; 24 -25). தேவனுடைய ஆவியின் வல்லமையால் இயேசுவின் மனித உரு மரியாளின் கர்ப்பத்தில் உதித்தது. இயேசு கிறிஸ்து மனிதனாகவும், அதே வேளையில் தேவனுடைய குமாரனாகவும் இருந்தார்.

அவர் செய்த பெரும் அற்புதங்களால் இயேசுவை தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கிறேன். புதிய ஏற்பாட்டு எழுத்தர்கள் குறிப்பிட முடிந்தவைகளுக்கும் மிகவும் அதிகமான பல அற்புதங்களை அவர் செய்தார். (யோவான் 20 : 30-31; மத். 4 : 23-24; 9 : 35). ஒரு சிலவற்றை மட்டும் நாம் இங்கே கூறமுடியும். ஒரு புயலை அடக்கி காலநிலையின் மேல் இயேசுவுக்குள்ள வல்லமையைக் காட்டினார். (மத். 8 : 26) : ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரத்திற்கும் அதிகமான பேர்களுக்கு உணவளித்து பொருட்களின் மேல் அவருக்கிருந்த அதிகாரத்தைக் காட்டினார். (மத். 14 : 15 -21); தொழுநோய், குருடு மற்றும் சகல விதமான நோய்களையும் சுகப்படுத்தி, நோய்களின் மேல் தமக்கிருந்த அதிகாரத்தைக் காட்டினார். (மத். 8 : 1-4; 9 : 27-31); 4 : 23); லாசரு மரித்து நான்கு நாட்களுக்குப் பின்னர் அவனை உயிரோடு எழுப்பி, மரணத்தின் மேல் அவருக்கிருந்த அதிகாரத்தைக் காட்டினார் (யோ. 11:39-44) ஊன முற்ற ஒரு மனிதனின் பாவங் களை மன்னித்து, பின்னர் அவன் ஊனத்தை சுகப்படுத்தி, பாவத்தின்மேல் தனக்கிருந்த அதிகாரத்தைக் காட்டினார். (மத். 9 : 1-7).

பணத்திற்காகவோ, புகழ் சம்பாதிக்கவோ இயேசு இத்தகைய அற்புதங்களைச் செய்யவில்லை. அவர் அற்புதங்கள் செய்ய வேண்டியதன் அவசியம்: 1) தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்பதை நிரூபிக்க ". . . . . . . . கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ. . . " என சில மக்கள் கேட்டனர். (யோ

வான் 7 : 31). எருசலேமிலே, " . . . . . அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்". (யோவான் 2 : 23). " நீங்கள் அறிந்திருக்கபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்தை செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்," என இயேசுவை மக்களுக்கு பேதுரு நினைப்பூட்டினார். (அப். 2:22). அன்றைய தினமே 3000 பேர்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். 2) தமது உபதேசங்கள் தேவனிடமிருந்து வருகின்றன என்பதை உறுதிப்படுத்த. இயேசுவின் அற்புதங்களை அறிந்தவனாகிய ஒரு யூதமதத் தலைவன் இயேசுவிடத்தில் வந்து, " . . . . ரபீ, (குருவே) நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டில் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்," (யோவான் 3 : 2). 3) துயரப்படுவோர்களிடம் தமது அன்பையும் கருணையையும் காட்ட, எரிகோ நகரத்தின் அருகில், இயேசுவின் இரக்கத்தை இறைஞ்சி இரு குருடர்கள் அவரிடம் வந்தனர். "இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின் சென்றார்கள்". (மத்தேயு 20 : 34).

இயேசுவின் அற்புதங்களை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டனர், அனுபவித்தனர். அப்படிப் பட்ட மக்கள் பலருடைய சான்றுகள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இயேசுவின் எதிரிகள் கூட அவர் செய்த அற்புதங்களை மறுத்துக் கூறமுடியவில்லை; மாறாக, ஒரு தீய சக்தியின் உதவியால் அவர் அற்புதங்களைச் செய்வதாக அவர்கள் கூறினர். (மத். 12 : 9 -14). பதினெட்டு ஆண்டுகளாக நிமிர்ந்து நிற்க இயலாத நோயுற்ற ஒரு பெண்ணை இயேசு சுகப்படுத்திய பின், "இயேசு ஓய்வு நாளிலே சொஸ்தமாக்கினபடியால், ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி : வேலை செய்கிறதற்கு ஆறு நாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள், ஓய்வு நாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான்" (லூக். 13 : 14). அந்த அற்புதத்தைச் செய்த நேரத்தைப் பற்றி மட்டுமே அந்த அதிகாரி கோபங் கொண்டானே தவிர, அச்செயலின் உண்மையை மறுக்கவில்லை. இயேசு உண்மையிலேயே தேவனுடைய குமாரன் என்பதற்கான வலிமைமிக்க சான்றுகள் அவருடைய அற்புதங்களாகும்.

(மீதி அடுத்த இதழில்)

**யொகோவா சாட்சிகள் - 5**

# கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்!

யெகோவா சாட்சியினர் மனித அறிவைச் சார்ந்தவர்கள். அதனால் அவர்கள் வேதாகமத்தின் அநேக காரியங்களை புரிந்து கொள்ள முடியாதவர்களாய் (புரிந்து கொள்ள மறுக்கக் கூடியவர் களாய்) இருக்கிறார்கள். இதில் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் இவர்கள் புரிந்து கொள்ள மறுப்பது வேதனைக்குரியது. பரிசுத்த ஆவியும் ஒரு நபர் என்பதை அவர்கள் மறுக்கின்றனர். நான் சத்தி யத்தின் மீது கொண்டுள்ள அன்பினாலும், ஆத்தும தாகத்தினாலும் கடினமான வார்த்தைகளை பிரயோகிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். இதற்காக வருந்துகிறேன். பூப்பந்துக்குள் கல்லை வைத்து இவர்கள் மீது எறிகிறேன்.

தேவத்துவத்தை இவர்கள் அறியாதபடியினால் வேதாகமத்தின் ஆவிக்குரிய உபதேசங்களையும் இவர்கள் புறக்கணிக்கின்றனர். '.... ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். .... அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவும் மாட்டான் என்று பவுல் மிக அழகாக கூறினார். (1 கொரி 2 : 12 - 14) அவர்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருப்பதினால், அவைகளை புரிந்து கொள்ளமாட்டார்கள். 'இயேசு கிறிஸ்து ஒரே நேரத்தில் எப்படி தெய்வ மாகவும், மனிதனாகவும் இருக்ககூடும்' என்பது அவர்களுடைய கேள்வி.

'ஒரே நேரத்தில் எப்படி இயேசு கிறிஸ்து மனிதனாகவும், தெய்வமா கவும் இருக்கக் கூடும்?' என்ற இவர்களின் இக்கூற்றை முதலாவதாகக் காண்போம். கிறிஸ்து இயேசு 'இம்மானுவேல்' எனப்படுவார் என்று முன்னுரைக்கப்பட்டது. கிறிஸ்து மனிதனாக் மட்டும் இருந்திருந்தால் அவர் மனிதனாகிய யோசேப்புக்கும் மனுஷியாகிய மரியாளுக்கும் பிறந்தவராக இருக்க வேண்டும். அவர் (பூமியில் இருந்தபோது) தெய்வமாக மட்டும் இருந்திருந்தால் தெய்வமாகிய யெகோவாவிற்கும் மனித பார்வையிலான ஏதோ ஒரு 'பெண் தேவதைக்கும்' பிறந்திருக்க

வேண்டும். ஆனால் மரியாளோ மனுஷி (நிழலிட்ட பரிசுத்த ஆவியோ தெய்வம். ஆதலால் மனுஷியாகிய மரியாளுக்கும், தெய்வமாகிய யெகோவாவின் சித்தத்திற்கும் இடையே பிறந்த கிறிஸ்து) தேவன் நம்மோடிருக்கிறார் என்ற பொருள்பட 'இம்மானுவேல்' ஆனார். இந்த ஒரு எளிமையான கருத்தைக்கூட இவர்களால் புரிந்து கொள்ள இயல வில்லை.

யெகோவா சாட்சியினர் மதியீனமாய்க் கேட்கும் மற்றொரு கேள்வி, 'இயேசு கிறிஸ்து தெய்வமானால், "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்று அவர் ஜெபித்தபோது தனக்குத்தானே ஜெபித்துக் கொண்டாரா?' என்றும் கேட்கின்றனர். 'இயேசு கிறிஸ்து தெய்வ மானால், அவர் மரித்து கல்லறையில் இருந்த நாட்களில் அண்ட சராசரங்களையும் ஆண்டது யார்?' என்றும் கேட்கின்றனர். இவர்கள் தங்கள் உபதேசத்தை உறுதிபடுத்த வேத வசனங்களைத் தொடர்ந்து புரட்டுகின்றனர். சத்தியத்தை நேர்மையாக தேடுகிறவர்களாயிருப்பின், தேவனுடைய வசனத்திற்கேற்ப தங்கள் உபதேசங்களை மாற்றிய மைக்கத் தீர்மானிக்கட்டும். குறுகிய அறிவு படைத்த மனிதர் எல்லை யற்ற தேவனின் காரியங்களை அறிந்து கொள்ள இயலாது. (உபாகமம் 29 : 29) என்பதை முன்பு அறியவேண்டும். இரண்டாவதாக, நாம் மூன்று தேவர்களை ஆராதிப்பதில்லை. மூன்றாவதாக மனுஷனாகிய கிறிஸ்து தேவர்களில் ஒருவராக மாறவில்லை. ஆனால் தெய்வமாகிய கிறிஸ்துவே மனுஷீகத்தில் வந்தார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், அவர் பூமிக்கு வந்தபோது தெய்வீகத்தை புறம்பே ஒதுக்கி வைத்து விட்டு வராமல், தமது மகிமையையே தற்காலிகமாக நிறுத்தி வைத்து விட்டு வந்தார். யெகோவா சாட்சியினரின் பிரச்னை கிறிஸ்து கன்னி கையினிடத்தில் பிறந்தார் என்பதை ஏற்றுக் கொள்ளும் அவர்கள், அவரின் மனித அவதாரத்தையே நம்ப மறுப்பதுதான். (இங்கு அவதாரம் எனும் லத்தின் பதம், வேதாகமத்தின் வார்த்தையல்ல, ஆனாலும் வேதாகம உண்மையை இது விளக்கப்படுத்துகிறது. அதாவது யோவான் 1 : 14ல் 'அந்த வார்த்தை மாமிசமானது' என்பது இதுவே.)

மனித மற்றும் தெய்வீக இயல்புடைய கிறிஸ்துவின் தனித்தன்மை, தெய்வீக வெளிப்பாடாக குறைந்தபட்சம் ஏழு வசனங்களில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. அவைகள் : பிலிப். 2 : 6 - 11, யோவான், 1 : 1 -14, ரோமர். 1 : 2-5, 9 : 5 1, தீமோ, 3 : 16, எபி. 2 : 14, 1 யோவான் 1 : 1-3 இவ்வசனங்கள் எல்லாவற்றிலிருந்தும், கிறிஸ்து பூமியில் வந்து உதித்த

தன்மை, உங்களைப் போலவும் என்னைப் போலவுமான ஒரு'சிருஷ்டிக்கப்பட்டவர்' என்பதை காட்ட அல்ல என்பதை அறிகிறோம். மாறாக, மனித சரீரத்தில் வந்த தெய்வீகத் தன்மையையே வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து உலகில் இருந்தபோது, தன்னை தேவன் என்று சொன்னார். (யோவான், 10 : 33) இதனால்தான் அவரை யூத மதத் தலைவர்கள் கல்லெறிய முற்பட்டனர். யெகோவா தேவனே, குமாரனை (இயேசுவை) நோக்கி, 'தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது' என்று கூறியிருக்கிறார். (சங். 45 : 6, 7, எபி. 1 : 8 -9).

இதை மனதிலே கொண்டு, ஒரு கேள்வியைக் கேட்போம். 'இயேசு கிறிஸ்து ஏன் மனிதனாக வந்தார்?' அநேக காரணங்கள் இருப்பினும், இங்கே ஏழு காரணங்களை மட்டும் காண்போம்.

1. தேவனின் இயல்பு எப்படிப்பட்டது என்பதை வெளிப்படுத்த அவர் மனுஷ சாயலானார். (எபி. 1 : 3).
2. மனிதன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்பதை தேவன் விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்த (சங். 8 : 4).
3. உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய அவர் மனிதனாக வந்தார். (யோவான் 1 : 29).
4. நியாயப் பிரமாணத்தின் சாபங்களிலிருந்து மீட்கும்படியாக (கலா. 4 : 4, 5)
5. மனிதனுக்கும், தேவனுக்கும் இடையிலே மத்தியஸ்தராய் விளங்கும் பொருட்டு (1 தீமோ. 2 : 5) இப்படியாக பரலோகத்தின் தேவனையும், மனுஷனையும் ஒருங்கிணைக்கும் ஒரு தெய்வமாக வந்தார்.
6. தேவனுடைய அன்பை விளங்கப்பண்ணும்படி கிறிஸ்து மனிதனாக வந்தார். (யோவான் 3 : 16).
7. இரக்கமும், பரிதபிக்கக் கூடியவருமாகிய ஒரு பிரதான ஆசாரியனாகக் காட்ட அவர் மனுஷீகத்தில் வந்தார்.

தங்களைத் தாங்களே ஆக்கினைக்குள்ளாக்கத்தக்க வகையில் செய்யப்பட்ட யெகோவா சாட்சியினரின் முரண்பாடான (வேதாகம) மொழிபெயர்ப்பை காண்போம். ஆங்கிலத்தில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டுள்ளது. இவற்றின் ஐந்து மொழி பெயர்ப்புக்களை யெகோவா சாட்சியினர் செய்துள்ளனர்.

பிற மொழிபெயர்ப்பாளர்கள் அனைவரும் யோவான். 1 : 1- ஐ பின் வருமாறு மொழி பெயர்த்திருக்கின்றனர். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது'. ஆனால் யெகோவா சாட்சியினரின் (ஆங்கில) மொழிபெயர்ப்போ, 'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்தவார்த்தை தேவர்களில் ஒருவராய் இருந்தது'. இதில் யெகோவா சாட்சியினர் மட்டுமே 'அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்பதை தவறான மொழியாக்கம் செய்துள்ளனர். அதாவது யெகோவா சாட்சியினர் மாத்திரமே கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலித்து, 'அந்த வார்த்தை தேவர்களில் ஒருவராய் இருந்தது' என்கின்றனர்.

நமது கேள்வி : யெகோவா சாட்சியினரைத் தவிர மற்ற எல்லா மொழி பெயர்ப்பாளர்களும் தவறானவர்கள். இவர்கள் மட்டும் சரியானவர்களா? இவர்கள் மட்டுமே மூலபாஷைகளை நன்கு அறிந்தவர்கள். மற்றவர்களுக்கு மூலபாஷை தெரியாதா? அநேக வருடங்களாக இவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பான'பரிசுத்த வேத எழுத்துக்களில் புதிய உலக 50 மொழிபெயர்ப்பாளர்களின், பெயர்களை இவர்கள் இரகசியமாகவே வைத்திருந்தனர். 1954-ல் நீதிமன்றம் ஒன்றில் இது குறித்து நடந்த விசாரணையின்போது, மேற்படி இவர்களின் மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவரான ஃபிரான்ஸ் கூறியதாவது : 'மொழிபெயர்ப்பாளர்களின் குழு தனக்கென மகிமையையோ, கனத்தையோ ஒருவர் பெறாதபடிக்கும், எந்தப் பெயரையும் சேர்க்காமல் மொழிபெயர்த்தவரின் பெயரை வெளியிடாமல் இருந்தோம்' என்றார்.

மற்றொரு புறம், அநேக வருடங்களாக யெகோவா சாட்சிகளுடன் வேலை செய்து வந்த வில்லியம் செட்னர் என்பவர், 'மொழிபெயர்ப்பாளர்களின் பெயர்கள் மறைபொருளாக வைக்கப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

1. மொழிபெயர்ப்பாளர்களின் தகுதியாம்சங்களை யாரும் சோதித்து அறிந்து மதிப்பிட இயலாது.

2. மொழியாக்கம் செய்ததாக யாரும் பொறுப்பேற்க வழி இருக்காது.'

என்றார். என்ன ஒரு இருட்டடிப்பு! மேலும் அவர், 'திரு ஃபிரான்ஸ் அவர்களின் மொழியாக்கம் செய்த நிபுணத்துவம் ஒரு வெளிப்படையான சர்ச்சைக்குரிய கேள்வியாகும். என்கிறார். யெகோவா சாட்சியினர் தங்களுக்கு வேதாகமத்தில் மூலபாஷைகளான எபிரேயம் மற்றும் கிரேக்கம் தெரிந்ததாக பெருமை பாராட்டிக் கொள்வர்.

ஆனால் இந்த மொழியாக்கம் செய்த நிபுணர் ஸ்காட்லாந்து கோர்ட்டில் 1954 நவம்பர் மாதம் அளித்த வாக்குமூலத்தைப் பாருங்கள்.

**கேள்வி** : எபிரேய மொழியில் நீங்கள் பரிச்சயம் ஆனவரா?

**பதில்** : ஆம்!

**கேள்வி** : அப்படியானால் நீங்கள் மொழிகளில் ஆழமாக நிபுணத்துவம் பெற்றவரா?

**பதில்** : ஆம். என்னுடைய வேதாகம பயிற்சியில் பயன்படுத்துவதற்காக நிபுணத்துவம் பெற்றேன்.

**கேள்வி** : நீங்கள் எபிரேயம், கிரேக்கு, லத்தீனம், ஸ்பானிஸ், போர்த்துகீசியம், ஜெர்மன் மற்றும் பிரெஞ்ச் மொழிகளை வாசித்து புரிந்து கொள்ளுவீர்கள் என்று நினைக்கிறேன்?

**பதில்** : ஆம். ( )

**கேள்வி** : உங்களுக்கு எபிரேய மொழியை வாசிக்கவும், பேசவும் தெரியம். அப்படித்தானே?

**பதில்** : எனக்கு எபிரேய மொழி பேசத் தெரியாது

**கேள்வி** : உங்களுக்கு எபிரேய மொழி பேசத் தெரியாதா?

**பதில்** : இல்லை, தெரியாது.

**கேள்வி** : இதையே நீங்கள் எபிரேய மொழியாக்கம் செய்து சொல்வீர்களா?

**பதில்** : இங்கேயா?

**கேள்வி** : ஆம்

**பதில்** : நான் மொழியாக்கம் செய்யமாட்டேன்.

இங்கே நமது இரண்டாவது கேள்வி. ஒரு நிபுணத்துவம் வாய்ந்த எபிரேய ஆசானே தனது வாக்குமூலத்தை எபிரேய மொழியில் மொழியாக்கம் செய்ய மறுப்பாரேயானால் தனக்கு எபிரேய மொழியில் எழுதவோ, பேசவோ தெரியாது என்று கூறும்போது அவர் எப்படி ஒரு சரியான மொழிபெயர்ப்பை செய்திருக்கக்கூடும்? யோவான் 1 : 1-ஐ இவர்கள் எப்படி சரியாக மொழியாக்கம் செய்திருக்கக் கூடும்? சிந்தியுங்கள்!

(தொடரும்)

**Bro. EA. ஆறுமுகம், திண்டுக்கல்.**

# இயேசு கிறிஸ்து, தேவனின் குமாரன்

இயேசு கிறிஸ்து ஒரு நல்ல மனிதராக இருந்தார். ஆனால் அவர் தேவகுமாரன் அல்ல என்று சிலர் சொல்லி வருகின்றனர். அவர் ஒரு நல்ல மனிதராக இருந்தார் என ஏன் சொல்லுகின்றனர்? புதிய ஏற்பாடு அவரைப் பற்றிக் கூறுபவைகளிலிருந்து அவ்வாறு சொல்லுகிறார்கள். இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார், அவர் தேவனின் குமாரனாக இருந்தார் ஏன் மீண்டும், மீண்டுமாக இயேசுவே கூறினார் என்று அதே புதிய ஏற்பாடு தான் சொல்லுகிறது. அவர் தம்மைத்தாமே யாரென்று சொன்னாரோ அப்படி அவர் இல்லையென்றால், அவர் ஒரு நல்ல மனிதராகக் கூட இருக்க முடியாது. ஏனென்றால், தம்மைப் பற்றிய உண்மையற்ற காரியங்களை ஒரு நல்ல மனிதர் கூறுவதில்லை.

கிறிஸ்தவர்கள் தேவனுடைய பிள்ளைகள். ஏனெனில் தேவனுடைய வார்த்தையால் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட்ட மக்களாவர் (யாக்கோப்பு 1 : 18) ஆனால் இயேசு மட்டுமே தேவனுடைய ஒரே குமாரனாக இருக்கிறார். கன்னியான அவருடைய தாய் மரியாள், பரிசுத்த ஆவியானவரால் அற்புதமாகக் கர்ப்பம் தரித்து தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டார்.

இயேசு கிறிஸ்து தேவனின் குமாரனும், எல்லா மக்களின் இரட்சகருமாவார். சகல மக்களின் பாவங்களுக்காக ஒரு ரோமச் சிலுவையில் அவர் மரித்தார். மூன்று நாட்களுக்குப் பின்னர், அவருடைய பிதாவாகிய தேவன், நம்மை அவர் நியாயந் தீர்ப்பதற்காக அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். (ரோமர் 4 : 24 லூக்கா 24 : 46, 47, 1 கொரிந்தியர் 15 : 1 - 3)

எல்லாருக்காகவும் இயேசு மரித்தார் என்ற உண்மையால், எல்லாருமே இரட்சிக்கப்படுவார்கள் எனப் பொருள் அல்ல. இயேசு கிறிஸ்துவை முழுமனதோடு நம்புவது என்றால், அற்புதமான அந்த நற்செய்தியையும், தேவனின் அற்புதமான குமாரனையும் விசுவாசிக்க

வேண்டும் என்று அர்த்தம். அதோடு உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், அவரில் உங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யவும், கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் முழுகி, எழுந்தி திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும் என்றும் அர்த்தம் (யோவான் 8 : 21-24 ரோமர் 10 : 8 - 10, 6 :3, 4 கொலோ 2 : 12)

இயேசுவைப் பற்றிய நற்செய்தியை விசுவாசித்து, திருமுழுக்குப் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான் என்று இயேசு கூறினார். (மாற்கு 16 : 15. 16) கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு, பேதுரு கூறினார். "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப். 2 : 38) இப்படிச் செய்பவர்களை, கர்த்தர் தமது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார் (அப் 2 : 41 - 47) இக்காரியத்தில் உங்களுக்கு உதவி தேவையென்றால், தயவு செய்து உங்களுக்கு அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை அணுகுவீர்.

Basil Overton — பேசில் ஒவர்டன்


## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20,MM ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க
**E.Z.S. ராஜநாயகம்**
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, **JUNE** 1995
**JUNE** 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER    BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27. KANGAYAM - 638 701